# <u>5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்</u>
## <u>( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)</u>
## <u>MCOP No.5283/2023</u>

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | சரளா |
| **க/த.பெயர்** | மோகன் ராஜ் |
| **வயது** | 33 |
| **விலாசம்** | பாடி, சென்னை |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 03.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, விபத்து பதிவு மசாஆ2, விடுவிப்பு சான்றிதழ் மசாஆ3, வெளிநோயாளி மருத்துவ சீட்டு மசாஆ4, ஊடுகதிர் படம் அசல் மசாஆ5, ஸ்கேன் ரிபோர்ட் மசாஆ6, ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ7, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ8, மனுதாரரின் வருமான வரி அட்டை நகல் மசாஆ9, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

மசாஆ10, எதிர்மனுதாரரின் வாகன பதிவு சான்று நகல் மசாஆ11, எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு சான்று நகல் மசாஆ12, எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ13.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் என்ன வேலை செய்தேன் என்றால் ஆட்டோ ஓட்டி வந்தேன். மாத வருமானம் ரூபாய் 15,000/ வரை இருக்கும். அதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரிதான். நீண்ட உட்கார்ந்திருந்தால் கால் மரத்துபோகிறது. சிகிச்சைக்கு பிறகு எவ்வாறு பராமரித்துகொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் சொன்ன ஆலோசானையை பின்பற்றுகின்றேனா என்றால் ஆம். விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் நடந்தது என்றால் சரியல்ல. இழப்பீடு பெருவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**X**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,<br><br>**<u>5 வது நீதிபதி</u>**<br>**<u>சென்னை</u>** |